# 1 கடவுளே மெய்ப்பொருள்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் சைவம் ஆகும். இது சிவன் என்பது மங்கலம் எனப்பொருள் தரும். மங்கலம் என்பது தீமையற்ற நன்மை வடிவானது. அதுவே சிவம் எனப்படும் கடவுளாகும். இதனை,

**சிவன் எனும் நாமம் தனக்கே உடைய**
**செம்மேனி யெம்மான்........**

என்கிறார் திருநாவுக்கரசு நாயனார். சைவசமயத்தில் கடவுள், இறைவன், நின்மலன், பதி எனப் பலபெயர்களில் அழைக்கப்படுகின்றார். கடவுள் என்றால் உள்ளத்தைக் கடந்தவர், உலகைக் கடந்தும் உலகத்துள்ளும் உள்ளவர் எனக்குறிப்பிடப்படும். கடவுதல் - இயக்குதல் என்ற அடிப்படையில் கடவுள் உலகை இயக்குபவர் என்று குறிப்பிடப்படுகிறார். சைவசமயத் தத்துவ அடிப்படையில் கடவுள் தலைவன் என்று குறிப்பிடப்படுகிறார். தலைவன் என்றால் தாங்குபவன் என்று பொருள். அதாவது, தன் கீழ் உள்ளாரை நல்ல வகையில் காத்து தலைமை தாங்குபவன் என்பதாகும். சைவசித்தாந்தம் கடவுளை இரு பிரிவுகளாக விளக்கிக் கூறுகிறது. ஒன்று, கடவுள் உண்டு என்பதை நிரூபிப்பது. இரண்டு, கடவுளுக்குரிய குணங்களையும் இயல்புகளையும் பற்றிக் கூறுவது.

உலகமானது சித்து, அசித்து என இருவகைப் பொருட்கள் கொண்டமைந்தது. **சித்து** என்பது அறிவுடைப்பொருள். **அசித்து** என்பது அறிவற்ற பொருள். அசித்துப்பொருட்கள் அனைத்தும் தோன்றி, நின்று அழியும் தன்மையன. எனவே இவற்றைப் படைத்து, காத்து, அழிப்பதற்கு இவற்றிற்கும் மேலான ஒரு சத்துப்பொருள் - மெய்ப்பொருள் இருக்க வேண்டும். அப்பொருளே சிவம் என்கிறது சைவசமயம். இன்னொரு வகையில் கூறுவதாயின், ஓர் சேலையை நெய்வதற்கு நெசவாளன் ஒருவன் இருக்க வேண்டும். சேலை தானாக உண்டாகாது. அதே போன்று இந்த உலகமும் தானே தோன்றாது. அதனைத் தோற்றுவித்தவன் அவ்வுலகத்துக்கு அப்பாற்பட்டவனாகவும் அதனுள் நின்று இயக்குபவனாகவும் இருக்கிறான். அவனே கடவுள் என்கிறது சைவசமயம். இதனை மெய்கண்டார் சிவஞானபோதத்தில்,

**அவன் அவள் அதுஎனும் அவைமூ வினைமையின்**
**தோற்றிய திதியே ஒடுங்கிமலத்து உளதாம்**
**அந்தம் ஆதி என்மனார் புலவர்**

என்று கூறுகிறார்.

சிவன் சிறப்பியல்பு, பொதுவியல்பு எனும் இயல்புகள் கொண்டமைந்தவர். சிவனின் சிறப்பு இயல்பு என்பது சொரூபலக்கணமாகும் இது வாக்குக்கு எட்டாதது, இதனைச் சொல்லிறந்து நின்ற தொன்மை என்று மாணிக்க வாசகர் கூறுவார். மாணிக்க வாசகர் போன்று சீவன் முத்தர் தம் உள்ளத்திலே பதியோடு ஒன்றித்து நின்று காணுவது இது, ஒன்றாய் பரிபூரணமாய் அறிவுக்கறிவாய், நின்மலமாய், உயிருக்குயிராய் குறியும் குணமும் இல்லாததாய், அருவும் உருவும் அருவுருவாய் இவை அல்லாததுமாய் அகண்டிதமாய், ஆனந்தமாய் விளங்குவது என்று உமாபதி சிவாச்சாரியார் இவ்விலக்கணத்தைக் கூறுவார். சிவனின் பொதுவியல்பு என்பது தடத்த இலக்கணமாகும். இது அவன் செய்யும் ஐந்தொழில்களைப் பற்றிக் கூறுகிறது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவே அவ் ஐந்தொழில்களாகும். உயிர்களின் பொருட்டு மாயையிலிருந்து உலகைப்படைத்தல், அவ்வுயிர்கள் தம் வினைப்பயன்களை அனுபவிக்கும் காலம் வரை அவற்றைக் காத்தல், உயிர்களின் வினைப்பயன் முடிவற்ற காலத்தில் அவற்றை அழித்தல் என்பவை அவனியற்றும் முத்தொழில்களாகும். உயிர்கள் மலங்களில் அழுந்தியிருக்கும் நிலை என்பது மறுத்தலையும், அம்மலங்களை நீக்கி அவற்றிற்கு முத்தியளிப்பது அருளலையும் குறிக்கின்றது. இவ் ஐந்தொழில்களையும்முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரர், சதாசிவர் என்னும் ஐந்து உருவின் மூலமாக சிவன் செய்கிறார். இதனை,

**படைப்பன் அயன், அளிப்பன் பங்கயக்கண் மாயன்,**
**துடைப்பன் உருத்திரனும் சொல்லில். - திடப்பெறவே**
**ஏன்றும் திரோபவிப்பர் ஈசர், சதாசிவரும்**
**ஆன்றே அநுக்கிரகர் ஆம்**

என்கிறது உண்மை விளக்கம் எனும் நூல்.

இத் தடத்த நிலையில் இறைவனுக்கு எண்குணங்கள் காணப்படும் தன்வயத்தனாதல், தூய உடம்பினாதல் இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின்று நீங்குதல், பேரருள் உடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பவை அவையாகும். இங்கு தன்வயத்தனாதல் என்பது தானே அறியும் ஆற்றலுடைய ஒரே முதல்வனாம். இதனை உபநிடதம் "ஏகன்" எனக் குறிக்கிறது. தூயவுடம்பினனாதல் என்பது பதி பாசத்தினால் பீடிக்கப்படாமல் தூய்மையாக இருப்பவன் என்பதாம். இயற்கை உணர்வினனாதல் என்பது இறைவன் தானே அறியும் ஆற்றல் கொண்டவன் என்பதைக் குறிக்கிறது. முற்றும் உணர்தல் என்பது அனைத்துப் பொருள்களைப் பற்றியும் அறிந்தவன் இறைவன் எனவும். இயல்பாகவே பாசங்களில் நீங்குதல் என்பது சுதந்திரமான இறைவன் பாசத்தால் பீடிக்கப்படாதிருத்தல் எனவும், பேரருள் உடைமை என்பது பிறர் துன்பம் கண்டிரங்கும் கருணை வடிவான இறைவன் எனவும், முடிவில் ஆற்றல் உடைமை என்பது பேரறிவு கொண்ட இறைவனின் செயல்

பேராற்றலுடையது, அதாவது முடிவில்லா ஆற்றல் கொண்டது எனவும் வரம்பில் இன்பமுடைமை என்பது பேரறிவும் பேராற்றலும் கொண்ட இறைவன் எல்லையில்லா இன்பத்தைக் கொண்டு விளங்குபவன் எனவும் கூறப்படுகின்றது. இவ் எண்குணங்களையுடைய இறைவன் சச்சிதானந்தன் என்று அழைக்கப்படுகிறார். இத்தகைய பெருமைகளைக் கொண்டு உயிர்களைக் காத்தருளும் இறைவனை நாம் என்றும் மறவாத போற்றி வழிபடுதல் அவசியமானதாகும். இதனை,

**நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்**
**சலமிலன் பேர்சங் கரன்**

எனக்கூறுகிறது திருவருட்பயன். இறைவன் தன்னையடைந்து வழிபடும் உயிர்களுக்கு இன்பத்தைக் கொடுப்பவன். எக்காலத்தும் விருப்பு வெறுப்பைக் காட்டாத பண்பினன். அதனால் சங்கரன் (சங்- சுகம், கரன்- கொடுப்பவன்) எனப்படுகிறான். எனவே அறிவிற்கறிவாய் நின்று எம் பிறவிப்பிணி நீக்கும் இறைவனை நாம் தினமும் போற்றி வழிபடுவோமாக.

### மேல் வரும் வினாக்களுக்கு விடை தருக

1. சிவம் என்னும் பொருள் பற்றி விளக்குக.
2. தடத்தலக்கணம், சொரூபலக்கணம் பற்றிக் கூறுக.
3. இறைவனின் ஐந்தொழில்கள் எவை? அவற்றினைச் செய்யும் தெய்வங்களின் பெயர்களைக் கூறுக.
4. கடவுள் என்ற பதத்தை சித்தாந்த அடிப்படையில் விளக்குக.
5. இறைவனின் எண்குணங்கள் பற்றி விளக்கிக் கூறுக.

### செயற்பாடு

1. திருமுறைகளில் இறைவனின் ஐந்தொழில்கள் பற்றிக் கூறப்படும் பாடல்களைச் சேகரித்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
2. இறைவன் எண் குணங்களைக் கொண்டவன் என்பதற்கான விளக்கங்களைச் சிவஞானபோத நூலிலிருந்து திரட்டி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

### பாடச்சுருக்கம்

1. இறைவன் ஒருவரே உள்பொருள். ஏனையவை தோன்றி நின்று அழிபவை.
2. இறைவன் ஐந்தொழில்களைச் செய்வதோடு எண்குணங்களையும் உடையவராக விளங்குகின்றார்.
3. இறைவன் சொரூபலக்கணம், தடத்தலக்கணம் என இரு இயல்புகள் கொண்டவர்